முருகப்பெருமான் துணை

**மகான் வசிஸ்டமகரிஷி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.06.2022, ஞாயிற்றுக்கிழமை

1. தருமனே கலியிடரை போக்கும்
   தவராஜனே ஞான தேசிகனே
   பெருமை கூறி அருளாசி தனை
   புகலுவேன் சுபகிருது விடை திங்கள்
2. திங்களிலே இருபான்நவதிகதி கதிர்வாரம்
   (சுபகிருது வருடம் வைகாசி மாதம் 29 ம் நாள், 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை)
   தேசிகனுக்கு வசிஸ்டமகரிஷியும்
   இங்கனமே ஞான உலகம் அமைய
   இயம்பிடுவேன் உலகோர் நலமும்பெற
3. நலம் தரும் ஆறுமுகத்தார்
   ஞான வடிவதை ஏற்றுமே
   பலம்தரும் தரும புண்ணியவழி
   பணிவிடை செய்து வருதலுற
4. வருகவே பரிபக்குவம் தானும்
   வல்லமைபட கிட்டி இனிதே
   முருகப் பெருமான் வழிபாட்டின்
   முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு
5. பட்டுமே நித்ய பூசையும்
   பணிந்துமே நித்ய தர்மமும்
   தட்டாது செய்து தொடரவே
   தன்னார்வ தொண்டு மிக்க
6. மிக்க நல் சீடர்களாகி
   மேலவர்கள் அருளாசி பலமும்
   தேக்கமின்றி ஞானிகளாகும்
   தேசிகன் தேடலில் உறுதியாவர்
7. அவனி பாதுகாக்க வந்த
   அரங்கனே ஈசனாக அருளி
   புவனம் ஞானப் படைகளை
   புண்ணிய பலமோடு அடைய
8. அடைய அருள் வழிகாட்டல்
   அளவிலா செய்து வருக
   தடையற பிரணவக் குடிலை
   தரணியோர் நம்பி வருக
9. வருகவே மாற்றம் உண்டு
   வருமுலகில் தேற்றம் உண்டு
   முருகா அரங்கா என்கின்ற
   முழக்கம் செபமாகப் பரவ

10. பரவவே பாருலகம் தானும்
பாதுகாப்பு மிக்க பூமியாகி
அறமோடு இயற்கை வளம்
ஆளுமை அனைத்தும் சிறந்து

11. சிறந்து மாற்றம் காணும்
சித்திகள் கூடி உலகோர்
பரந்த உலகை ஞான உலகாக்குவர்
பாடிவந்த அருளாசி முற்றே

—சுபம்—